**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | |
| | | 2. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.5 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | | இணக்கமின்மைகள் | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிராமை. | 2.2.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை | 2.4(அ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான பணிப்பொறுப்புகள்

(அ) சிறு குற்றவாளிகளுக்காக சமுதாய சீர்திருத்தக் கட்டளைகளை பெற்றுக்கொள்ளல்.

(ஆ) சமய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலினூடாக கட்டளையிடுவோரை கல்வி ரீதியாக அபிவிருத்தி செய்தல்.

(இ) உளவியல் போதனைகளினூடாக சமூக சீர்திருத்த பங்காளர்களை உளவியல் ரீதியில் அபிவிருத்தி செய்தல்

(ஈ) தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக சமூக சீர்திருத்த பங்காளர்களின் இயலுமை அபிவிருத்தி மற்றும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்தல்.

(உ) விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மூலம் சமுதாய சீர்திருத்த பங்காளர்களின் இயலுமை அபிவிருத்தி மற்றும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்தல்

(ஊ) மருத்துவ சிகிச்சைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் மதுவுக்கு அடிமையான சமுதாய சீர்திருத்தப் பங்காளர்களை, அதிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(எ) ஆளுமை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஏ) சிறைக் கைதிகளின் குடும்பங்கள், குற்றம் இழைப்பதற்கு வாய்ப்புள்ள நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள், விடுதலை பெற்ற சிறைக்கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பொருளாதாரம் சமூக மற்றும் கல்வி ரீதியிலான அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

## 2.2 செயலாற்றல்

### 2.2.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) இரண்டு வருடங்களை விட குறைவான கட்டாயமற்ற சிறைத்தண்டனை அனுபவிக்கும் குற்றங்களுக்கு குற்றவாளிகளான நபர்களுக்கு தண்டப் பணமொன்று, சிறை வைத்தல் அல்லது இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனையொன்றுக்காக சமூக அடிப்படை சமுதாய சீர்திருத்தக் கட்டளையொன்றில் ஈடுபடுத்துவதற்கான நிதியேற்பாடுகள் 1999 இன் 46 ஆம் இலக்க சமுதாய அடிப்படை சீர்திருத்த அதிகாரச்சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், நீதிமன்றக் கட்டமைப்பினுள் சமுதாய அடிப்படை சீர்திருத்தப் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தினால் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினை அறிவூட்டியிருந்ததுடன், நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவானது நீதிபதிகளுக்கு அறிவித்து சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. எனினும், நீதிமன்றத்தினால் சமுதாய சீர்திருத்த கட்டளைகளை வழங்கக்கூடிய குற்றவாளிகளுக்கும் தண்டப்பணம் விதித்தல் அல்லது சிறை வைக்கப்பட்டமையின் காரணத்தால் மீளாய்வாண்டின் போது 02 வருடத்தை விடக் குறைவான தண்டனைக் காலத்தை கொண்ட 21,241 நபர்கள் சிறைவைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கைதிகள் மீளாய்வாண்டில் சிறைச்சாலைகள் நிறுவனத்திற்குள்ளான மொத்த கைதிகளின் எண்ணிக்கையில் 93 சதவீதமாவதுடன், அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது நாளொன்றுக்கு சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு மற்றும் மூலதன செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 14,358,916 ஆக இருந்தது.

(ஆ) சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்காக சமுதாய சீர்திருத்தக் கட்டளைகள் பெறப்படுமாயின், சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் சிறைக் கைதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் மற்றும் சிறைகளின் நெருக்கடியைக் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. மேலும் அவர்கள் மற்றும் அவர்களின் சீர்திருத்த நடைமுறையொன்றினூடாக அந்த நபர்களை சமுதாயப்படுத்தாமையின் காரணத்தால் மீண்டும் மீண்டும் சிறைக்கு செல்லும் எண்ணிக்கை குறைவடைதல், சீர்திருத்த நடைமுறையின் பின்னர் தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் மீண்டும் தவறான பாதையில் செல்லும் போக்கினை குறைத்துக் கொள்ளல் போன்ற நலன்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்பட்டது. சமுதாய சீர்திருத்த கட்டளைகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் அந்த நலன்கள் இழக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் சமுதாய சீர்திருத்த பங்காளர்களுக்காக 680 தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், 991 கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நீதிமன்றத்தில் சமுதாய சீர்திருத்த கட்டளைகள் போதியளவில் வழங்கப்பட்டிராமையால் உள்ளபடியாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது முறையே 170 மற்றும் 201 நிகழ்ச்சித்திட்டத்திட்டங்கள் மாத்திரமாகும். இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 10,766 ஆக இருந்தது.

### 2.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய திணைக்களத்தினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 88 | 87 | 1 | 1 |
| | மூலதனம் | 10 | 08 | 2 | 20 |
| | **மொத்தம்** | **98** | **95** | **03** | **3** |
| **2014** | மீண்டுவருபவை | 200 | 162 | 38 | 19 |
| | மூலதனம் | 13 | - | - | - |
| | **மொத்தம்** | **213** | **175** | **38** | **17** |
| **2015** | மீண்டுவருபவை | 222 | 215 | 07 | 3 |
| | மூலதனம் | 12 | 12 | - | - |
| | **மொத்தம்** | **234** | **227** | **07** | **3** |
| **2016** | மீண்டுவருபவை | 253 | 250 | 03 | 1 |
| | மூலதனம் | 13 | 10 | 03 | 25 |
| | **மொத்தம்** | **266** | **260** | **06** | **2** |
| **2017** | மீண்டுவருபவை | 264 | 256 | 08 | 2.87 |
| | மூலதனம் | 11 | 08 | 03 | 28.20 |
| | **மொத்தம்** | **275** | **264** | **11** | **3.84** |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றமை**

08 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 6.7 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 3.8 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால் சேமிப்பானது தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17.00 | 10.65 | 7.00 | 8.19 | 44.00 | 25.81 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

பணி நீக்கத்திற்கு உள்ளாகியிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 131,020 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைக் கடன் மீதியானது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**2.5 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**2.6 இணக்கமின்மைகள்**

**2.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

நிதிப்பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம் பொருட்கள் பெறப்பட்டமை சான்றுறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 574,771 தொகையான கடமை பிரயாணப் பைகள்

கொள்வனவின் போது பொருட்களை விநியோகிப்பதற்கு முன்னர் ரூபா 287,385 தொகையான பணம் 2017 திசெம்பர் 29 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிராததுடன், அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினாலேனும் உள்ளக கணக்காய்வொன்றினை மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.8 மனிதவள முகாமைத்துவம்

#### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவினத் தொகுதி தொடர்பாக ரூபா 230 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 04 | 02 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 124 | 108 | 16 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 468 | 398 | 70 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 11 | 06 | 05 |
| | மொத்தம் | 607 | 514 | 93 |

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 607 இல் வெற்றிடங்களின் எண்ணிக்கை 93 ஆக இருந்தது. இதற்கிடையே சிரேஷ்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்களிடமிருந்து 80 சதவீதம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் 19 சதவீதமான வெற்றிடங்கள் நிலவியமையால் திணைக்களத்தின் நிர்வாக ரீதியான பணிகளுக்கு தடங்கலாக அமைந்திருந்தது.